**மதிப்பிற்குரிய சட்டப்பேரவை உறுப்பினர்களே,**

தமிழ்நாட்டில், புதிதாக அமைக்கப்பட்ட பன்னிரெண்டாவது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத்தொடரில் உரையாற்றுவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். பெருமைக்குரிய இந்த சட்டமன்றப் பேரவைக்குப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுகளைத் தெரிவிப்பதுடன், மக்களின் முன்னேற்றத்திற்காக அவர்கள் ஆற்றும் பணிகளைச் செவ்வனே செய்ய நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். விருப்பு வெறுப்பின்றியும், சுதந்திரமாகவும் வாக்களித்து இம்மாநிலத்தின் ஆரோக்கியமான ஜனநாயக மரபைக் கட்டிக்காத்த, தமிழ்நாட்டு மக்களுக்கு நான் என்னுடைய உளமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. மாநிலச் சட்டமன்றப் பேரவைக்குத் தற்போது நடைபெற்று முடிந்துள்ள தேர்தல், பலவகையில் வரலாறு படைத்துள்ளது. தமிழக மக்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அளித்துள்ள தெளிவான, உறுதியான தீர்ப்பு, மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். இம் மாநில வரலாற்றில் இதற்கு ஈடு இணையே இல்லை. இத்தேர்தல் முடிவு, தமிழ்நாட்டு மக்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின்பால் குறிப்பாக, அக்கட்சியின் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் மீது வைத்துள்ள அசைக்க முடியாத நம்பிக்கையையே காட்டுகிறது.

3. இத்தேர்தலில், மாநிலம் முழுவதும் முதன் முறையாக, மின்னணு வாக்குப் பதிவு சாதனம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இச்சாதனங்களில் கோளாறு ஏற்பட்டதால், பல இடங்களில் வாக்குப் பதிவு தொடங்குவதில் காலதாமதம் ஏற்பட்டது. அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் ஜப்பான் போன்ற வளர்ச்சி அடைந்த நாடுகள் பல, மின்னணு வாக்குப் பதிவு சாதனங்களை பயன்படுத்திப் பார்த்த பிறகு, தற்போது,

வாக்குச்சீட்டு முறைக்கு மீண்டும் மாறியுள்ளன. இவ்வரசு, மின்னணு வாக்குப் பதிவு சாதனங்களைப் பயன்படுத்துவதை எதிர்க்கிறது; இதனை இந்தியத் தேர்தல் ஆணைத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்லும். தகுதிவாய்ந்த ஒரு கோடிக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் புகைப்பட அடையாள அட்டைகள் இருந்தும், அவர்களுடைய பெயர் வாக்காளர் பட்டியலிலிருந்து அகற்றப்பட்டிருந்ததால், வாக்களிக்க முடியாமல் தடுக்கப்பட்டனர். இவ்வரசு, இதனையும் தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்று, உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன்பாக, இந்த முரண்பாடுகளை நீக்க ஏற்பாடு செய்யும்.

4. மாநில அரசின் உயர் அலுவலர்களும், காவல்துறையினரும் மன உறுதியும் ஊக்கமும் குன்றியிருப்பது இவ்வரசின் கவனத்துக்கு வந்துள்ளது. இந்திய ஆட்சிப்பணி, இந்திய காவல் பணி மற்றும் இம்மாநிலத்தின் பிற பணிகளைச் சார்ந்த பணியாளர்களின் மன உறுதியையும் பெருமையையும் மீட்க இவ்வரசு உறுதி பூண்டுள்ளது.

**5.** இம்மாநிலத்தின் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கு சட்டம்—ஒழுங்கைப் பராமரிக்க வேண்டியது இன்றியமையாதது என்பதை இவ்வரசு உணர்ந்துள்ளது. தீவிரவாதம், பிரிவினைவாதம் மற்றும் அனைத்து வகையிலான பயங்கரவாதத்தை இரும்புக்கரம் கொண்டு அடக்க இவ்வரசு முயற்சிகள் மேற்கொள்ளும். கடந்த ஐந்தாண்டுகளில் வீரப்பனையும் அவனுடைய கூட்டாளிகளையும் பிடிக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றி பெறவில்லை. சமீப காலத்தில் தமிழ்நாடு விடுதலைப்படை (TNLA) மற்றும் தமிழ்நாடு மீட்புப்படை (TNRT) போன்ற தீவிரவாத, தேச விரோத மற்றும் பிரிவினை சக்திகள் வீரப்பனோடு தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளன. இவ்வரசு, மத்திய அரசு மற்றும் கர்நாடக அரசின் ஒத்துழைப்புடன் பயங்கர குற்றவாளியான வீரப்பனைப் பிடிக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும். சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கின்ற மக்களை அச்சுறுத்தியும் சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டும் வந்துள்ள, அரசியலமைப்பு மற்றும் சட்டங்களுக்கு உட்படாத, சக்திகளின் எண்ணிக்கை ஆட்சியில் இருந்தவர்களின் ஆதரவால்

பெருகியுள்ளது. அத்தகைய சட்டவிரோத சக்திகளை இவ்வரசு இரும்புக்கரம் கொண்டு அடக்கும்.

6. 1991 முதல் 1996 வரையில் காவல் படையை நவீனமாக்க பெருமுயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதற்குப் பிறகு இம் முக்கியமான பணியில் போதிய கவனம் செலுத்தப்படாததால் தேக்க நிலை ஏற்பட்டுள்ளது. காவல் படையை உலக அளவில், தலைசிறந்த படைகளுக்கு ஈடாக, சட்டத்தைச் செயலாக்கும் தகுதிவாய்ந்த திறமையான அமைப்பாக மாற்ற இவ்வரசு அதிக முக்கியத்துவம் அளிக்கும்.

7. கூட்டுறவு மற்றும் நல்லெண்ணத்தின் அடிப்படையில் அமைந்த சுமுகமான மத்திய–மாநில மற்றும் பன்மாநில நல்லுறவுகளுக்கு இவ்வரசு பாடுபடும். மத்திய அரசைக் காட்டிலும் மாநில அரசுகளே மக்களுக்கு நெருக்கமானவை. பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படுகின்ற இன்றியமையாப் பொருட்களின் வழங்கல் விலையை அதிகரித்தல் போன்ற வறியவர்களை பாதிக்கின்ற முக்கிய பொருளாதாரப் பிரச்சினைகள்

குறித்து முடிவெடுக்கும் முன்னர் மத்திய அரசு, மாநில அரசுகளுடன் கலந்தாலோசிப்பது முறையாக இருக்கும். தமிழ்நாட்டின் பின்தங்கிய மாவட்டங்களில் பொருளாதார மேம்பாட்டைப் பறைசாற்றும் வகையில், பெருந்திட்டங்களை மேற்கொள்ளும்படி மத்திய அரசை இவ்வரசு வலியுறுத்தும். சேது சமுத்திரம் திட்டத்தை மத்திய அரசு விரைந்து செயல்படுத்தும் என்று இவ்வரசு நம்புகிறது. கப்பல் போக்குவரத்தை மேம்படுத்தும் பொருட்டு, சென்னை, கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி, கொளச்சல் துறைமுகங்களை மேம்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யுமாறு மத்திய அரசு வலியுறுத்தப்படும். "கிருஷ்ணா நதி நீர்த்திட்டத்தை" விரைந்து முடிக்க உடனடி நடவடிக்கை எடுக்கும்படி இவ்வரசு ஆந்திர அரசை வற்புறுத்தும். முல்லை–பெரியாறு அணையின் உயரத்தை 152 அடியாக உயர்த்த, கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும். நீண்டகாலமாக தீர்வு காணப்படாமல் உள்ள காவிரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சனையை முடிவுக்குக் கொண்டுவருவதில் இவ்வரசு, கர்நாடக அரசின் ஒத்துழைப்பை நாடும்.

**8.** அடுத்தடுத்து வந்த நிதிக் குழுக்கள் நிதிப் பகிர்வில், தமிழ்நாட்டிற்குச் சேரவேண்டிய நியாயமான பங்கினை அளிக்கத் தவறியுள்ளன என்பதை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். முன்னேற்றப் பாதையில் செயல்படுகின்ற மாநிலங்களின் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதில், மத்திய அரசு தன்னுடைய கடமையை புறக்கணிக்கக் கூடாது என்பதை இவ்வரசு மத்திய அரசிடம் வலியுறுத்தும்.

**9.** வேளாண்மை ஊரகப் பொருளாதாரத்தின் முக்கிய ஆதாரமாக விளங்குவதால், வேளாண் உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் அதிகரிக்கும் வகையில் நவீன பாசன முறைகள், அறிவியல் ரீதியான நீர்நிர்வாக முறைகள் மற்றும் வேளாண் நடைமுறைகள் ஆகியவற்றை விவசாயிகளிடம் பரப்புவதற்குத் தனி முக்கியத்துவம் அளிக்கப்படும். நிலத்தை முழுமையாகப் பயன்படுத்துதல், வேளாண் நோக்கங்களுக்காக தரிசு நிலங்களை மேம்படுத்துதல், மண் வளத்தை மேம்படுத்துதல், மற்றும் புன்செய் பயிர் மேம்பாடு, தோட்டக்கலை, மலர்ச்செடி வளர்ப்பு, மீன்வளர்ப்பு,

அறுவடைக்குப் பின் பராமரிப்பு, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளை வலுப்படுத்துதல் ஆகியவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்ட, புதிய வேளாண் கொள்கை உருவாக்கப்படும். தொடர்ந்து நிலவிவரும் பாசன நீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க, மழைநீரைச் சேகரிக்கும் முறைகளில், விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் பயிற்சி அளிக்கும் பெருந் திட்டம் ஒன்று செயலாக்கப்படும்.

10. உழவர் சந்தைகளால் விவசாயிகளும் பயனடையவில்லை; நுகர்வோரும் பயனடையவில்லை. எனவே இத்திட்டம் தோல்வி அடைந்துள்ளது. இவ்வரசு, செயல்படாமல் உள்ள உழவர் சந்தைகளை மூடிவிடக் கருதியுள்ளது. தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு நடைபெற்று வருகின்ற உள்ளூர் சந்தைகளுக்கு "கிராமச் சந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்" மூலமாக, புத்துணர்ச்சி அளிக்கவும் அவற்றை வேளாண் விளைபொருள் விற்பனை மையங்களாக மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கக் கருதப்பட்டுள்ளது.

**11.** ஊரக மக்களுடைய குடும்ப வருவாயைப் பெருக்குவதில், கால்நடைகள் மிகவும் முக்கியமான பங்கு வகிக்கின்றன. கறவைக் கால்நடைகளின் தரத்தை உயர்த்த வல்லுநர்கள் பரிந்துரைகளின் அடிப்படையில் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த இவ்வரசு கருதியுள்ளது. விவசாயிகள் தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ள ஏதுவாக, கூடுதல் தொழிலாக கலப்பின செம்மறியாட்டு பண்ணைகள், மீன் வளர்ப்புப் பண்ணைகள், கோழி வளர்ப்புப் பிரிவுகள் ஆகியவற்றை நடத்த ஊக்கமளிக்கும் சிறப்புத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படும்.

**12.** இம்மாநிலத்தில் அதிகரித்துவரும் வீட்டு வசதித் தேவையை நிறைவு செய்வதற்காக இவ்வரசு முனைப்புடன் செயல்படும். "ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு" என்பதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு, இவ்வரசு செயல்பட்டு அந்நோக்கத்தை எய்தும் வகையில் "வீட்டுமனை விரைவு ஒதுக்கீட்டுத் திட்டம்" ஒன்றை வகுக்கும்.

**13.** தமிழ்நாட்டை தற்போது தாக்கியுள்ள கோடையின் கடுமை காரணமாக ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையால் மக்கள் சொல்லொணாத அளவிற்கு அவதிப்படுகின்றனர். பாசனத்திற்காகவும், வீடுகளில் பயன்படுத்துவதற்காகவும் நீண்ட காலத்திற்கு தொடர்ந்து நீர் கிடைக்கச் செய்வதற்காக, உடனடி நடவடிக்கையை இவ்வரசு மேற்கொள்ளும். பின்வரும் வழிகளின்மூலம் இது நிறைவேற்றப்படும்.

- ❖ தமிழ்நாட்டில், 100 பேருக்கு மேற்பட்ட மக்கள் தொகையுள்ள குடியிருப்புப் பகுதிகள் ஒவ்வொன்றிற்கும், ஒரு குடிநீர் ஆதாரத்தையாவது ஏற்படுத்திக் கொடுப்பதற்காக காலவரையறைக்குட்பட்ட திட்டம் ஒன்றைச் செயல்படுத்துதல்.

- ❖ கிருஷ்ணா நதி நீர்த்திட்டத்தின்கீழ் ஸ்ரீசைலம்– சோமசீலா பகுதியில் எஞ்சியுள்ள வாய்க்கால் வெட்டும் பணியை உடனடியாக முடிக்க ஆந்திர மாநில அரசு வலியுறுத்தப்படும். சென்னை மாநகர மக்களின் குடிநீர்த் தேவைகளை நிறைவு

செய்வதற்காக, இரண்டு புதிய நீர்த் தேக்கங்கள் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

- ❖ புதிய வீராணம் திட்டத்திற்கான திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இத்திட்டம் தேசிய மற்றும் பன்னாட்டு நிதி நிறுவனங்களின் உதவியுடன் செயல்படுத்தப்படும்.

- ❖ பயன்படுத்துவோரின் தீவிர ஒத்துழைப்புடன் இம்மாநிலம் முழுவதிலும் அமைந்துள்ள அனைத்து ஏரிகள், பாசன வாய்க்கால்கள், ஆகியவற்றை நவீனப்படுத்தி, அவற்றின் கொள்ளளவுத் திறனை மேம்படுத்தும் சிறப்புத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படும்.

- ❖ இந்நாட்டிலுள்ள அனைத்து ஆறுகளையும் தேசியமயமாக்கவும், மத்திய இந்தியா மற்றும் தென்னிந்தியாவிலுள்ள பெரும் ஆறுகளை இணைக்கும் தீபகற்ப ஆற்று நீர் இணைப்புத் திட்டத்தைப் படிப்படியாக செயல்படுத்தவும் மத்திய அரசு வலியுறுத்தப்படும்.

**14.** தமிழ்நாட்டிலுள்ள உள்ளாட்சி அமைப்புகள், நிதிநிலை மற்றும் நிர்வாகத்தில் தொடர்ந்து பின்னடைவைச் சந்தித்து வந்துள்ளன. அனைத்து உள்ளாட்சி மன்றங்களுக்கும் தேர்தல்களை விரைவில் நடத்த இவ்வரசு உத்தேசித்துள்ளது. பாகுபாடு எதனையும் காட்டாமல், உள்ளாட்சி மன்றங்களின் நிதி ஆதாரங்களை மேம்படுத்த இவ்வரசு முயற்சி செய்யும். இவ்வாறு செய்வதன் மூலம், ஊரக மற்றும் நகர்ப்பகுதிகளில் நிலையான அடிப்படை ஆதாரங்களை உருவாக்க இயலும். உள்ளாட்சி நிர்வாகத்தில் இரண்டு அடுக்கு முறைக்கு வகை செய்வதற்கும் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்களை மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்க வழிவகை செய்வதற்கும் அரசியலமைப்பு சட்டத்தைத் திருத்த நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசு வலியுறுத்தப்படும்.

**15.** தொடக்க கூட்டுறவுச் சங்க நிர்வாக அமைப்புகளின் பதவிக் காலம் ஏற்கனவே முடிந்துவிட்டதால், இவ்வமைப்புகளைக் கலைத்து விடுவதற்காக இவ்வரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெற்ற முறைகேடுகள் முழுமையாகப் புலனாய்வு செய்யப்பட்டு, ஊழலில் ஈடுபட்டவர்கள் மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும். 2001 செப்டம்பர் திங்களில் நடத்தப்படவிருக்கும் தேர்தல்கள் மூலம், இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவு நிறுவனங்களில் உண்மையான ஜனநாயக உணர்வை ஊட்டவும் இவ்வரசு விழைகிறது.

16. பொது விநியோகத் திட்டத்திற்கு, உணவு மானியமாக இதுவரை மாநில அரசு பெருந் தொகையைச் செலவிட்டு வந்துள்ளது. இருப்பினும் இத்திட்டத்தில் இலஞ்சமும் ஏனைய முறைகேடுகளும் மலிந்துள்ளன. பொது விநியோக முறை, நுகர்வோரின் நலனை நோக்கமாகக் கொண்டதாகவும் முறைகேடுகள் அற்றதாகவும் அமைகின்ற வகையில் அதனை சீரமைக்கவும், மாற்றியமைக்கவும் இவ்வரசு உயர் முன்னுரிமை அளிக்கும். பொது விநியோக முறைக்காக வழங்கப்படும் பொருள்கள் கடத்திச் செல்லப்படுவது இரும்புக் கரம் கொண்டு தடுக்கப்படும். குடும்ப

அட்டைகள் வழங்குவதில் கண்டறியப்பட்ட குறைபாடுகள் சரிசெய்யப்படும். தரமுள்ள அனைத்து வகையான இன்றியமையாப் பொருள்களும் தடையின்றி வழங்கப்படுவதற்கான முயற்சிகளை இவ்வரசு மேற்கொள்ளும். இன்றியமையாப் பொருள்களின் விநியோகத்தில் ஈடுபட்டுள்ள நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களில், கொள்முதல், விற்பனை மற்றும் நிதி நிர்வாகப் பணிகள் கணினிமயமாக்கப்பட்டு மின்னணுசார் நிர்வாகம் செயல்படுத்தப்படும்.

17. தமிழ்நாடு நமது நாட்டிலேயே மிகவும் தொழில்வளம் மிக்க மாநிலமாக உயர்வதற்கான நடவடிக்கைகளை இவ்வரசு மேற்கொள்ளும். புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு ஏதுவான ஆய்வை மேற்கொள்ள, வல்லுநர் குழு ஒன்று ஏற்படுத்தப்படும். முதலீட்டை ஈர்ப்பதையும், வேலைவாய்ப்பை உருவாக்குவதையும் குறிக்கோளாகக் கொண்ட புதியதோர் தொழில் கொள்கை வகுக்கப்படும். வெளிநாட்டு முதலீடுகளைப் பெறுவதற்கும், தொழில்நுட்ப

உத்திகளை இம் மாநிலத்திற்குக் கொண்டுவருவதற்கும் உலகம் முழுவதிலும் வாழும் தமிழர்களைக் கொண்ட "வெளிநாட்டில் வாழும் இந்தியத் தமிழர்களின் கூட்டமைப்பு" (Consortium) ஒன்றை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

18. தொழில் மயமாக்குவதை ஊக்குவிக்க, போதிய அளவிற்கு கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். தேசிய நெடுஞ்சாலைகளைப் பராமரிப்பதற்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று இவ்வரசு, மத்திய அரசை வலியுறுத்தும். மாநில நெடுஞ்சாலைகள், ஊரகச் சாலைகள் மற்றும் பாலங்களின் தரத்தை உயர்த்தவும், பராமரிப்பதற்கும் பன்னாட்டு அமைப்புகளின் மூலம் நிதியுதவியைப் பெறுவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்தும் இவ்வரசு ஆராயும். செலுத்த இயலுகின்ற கட்டணத்தில், மக்கள் பயணம் செய்வதற்கும் சரக்குகள் எடுத்துச் செல்வதற்கும், அதிக வசதிகள் செய்துகொடுக்கும் நோக்குடன் போக்குவரத்துத் துறையின் நிலை ஆய்வு செய்யப்படும்.

**19.** வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதற்கும், மக்களின் வருமானத்தை உயர்த்துவதற்கும், மாநிலத்தின் நிர்வாகமுறையில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்குடனும் "தகவல் தொழில்நுட்பவியல்" புரட்சியை முதன்மைப் பணியாக மேற்கொள்ள வேண்டியது அவசியமென்று இவ்வரசு உணர்ந்துள்ளது. "கண்ணாடி இழை" (fibre-optic) தொழில் நுட்பவியலைப் பயன்படுத்தி, தகவல் தொழில்நுட்பவியல் கட்டமைப்பு அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இணையம் வாயிலாக ஊரக மற்றும் நகர்ப்புறப்பகுதிகளை இணைப்பதில் தனியார் தொழில் முனைவோர்களின் முக்கிய பங்கை அரசு உணர்ந்துள்ளது. கணினி மென்பொருள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழில் முனைவோருக்கு பன்னாட்டுச் சந்தைகளை எளிதில் அணுகும் வகையில் பல்வேறு மாவட்டங்களில், செயற்கைக்கோள் தரை நிலையங்கள் (Satellite Earth Stations) நிறுவப்படும்.

**20.** தமிழ்நாட்டிலுள்ள சிறுதொழில் நிறுவனங்கள் பரிதாபத்திற்குரிய நிலையில் உள்ளன. அரசுக்குத்

தேவையான பொருட்களைக் கொள்முதல் செய்வதில் சிறுதொழில் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டுவந்த முன்னுரிமையைத் தடைசெய்து 19–2–1997 அன்று வெளியிடப்பட்ட நிதித்துறையின் அரசு ஆணை எண் 75 இரத்து செய்யப்பட்டு இந்நிறுவனங்களுக்கான ஆதரவு மீண்டும் வழங்கப்படும். திருமுல்லைவாயலில் 1000 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுதொழில் தொழிற்பேட்டை ஒன்றும், தக்கதோர் இடத்தில் மகளிருக்கான தொழிற்பேட்டை ஒன்றும் ஏற்படுத்த முனைப்பான நடவடிக்கை எடுக்கப்படும். இலட்சக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பளித்து வந்த கட்டுமானத் தொழில் மற்றும் வீடுகள்–மனைகள் வாங்குதல்–விற்றல் (real estate business) ஆகிய தொழில்களுக்கு புத்துயிரளிப்பதற்காக உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். சிமெண்ட் தொழிலில், நேர்மையற்ற வணிக நடைமுறைகளைத் தவிர்ப்பதற்காகவும் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் மற்றும் சிமெண்ட் விலையேற்றத்தைச் சமாளிப்பதற்கு, முறையான கட்டுப்பாட்டு அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்காகவும் தகுந்த நடவடிக்கை எடுக்க மத்திய அரசு வலியுறுத்தப்படும்.

21. பொருளாதார மற்றும் தொழில் வளர்ச்சிக்கு போதிய மற்றும் தடையில்லா மின்வசதி இன்றியமையாததாகும். 1991 முதல் 1996 வரை, இவ்வரசு, ஆட்சியிலிருந்தபோது, இம்மாநிலத்தின் மின் உற்பத்தித் திறனளவு 968 மெகாவாட் அதிகரிக்கப்பட்டது. ஆனால் கடந்த 5 ஆண்டுகளில் 458 மெகாவாட் அளவே அதிகரிக்கப்பட்டுள்ளது. 1991–96 ஆம் ஆண்டுக் காலத்தில் உருவாக்கப்பட்டு, பின்னர் முந்தைய அரசால் கைவிடப்பட்ட அனல் மின் நிலையத் திட்டங்கள், தற்போது இம்மாநிலத்தின் மொத்த மின் சக்தியின் தேவையளவைக் கருத்தில் கொண்டு, மீண்டும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். மின் உற்பத்தி, விநியோகம், அனுப்புகை ஆகிய நிலைகளில், "மின்சக்தித் தணிக்கை", மற்றும் "மின்சக்தித் திட்டமிடுதல்" செயல்படுத்தப்படும். காற்றாலை, சூரிய ஒளி (Solar energy), எரிசாராவி, கருப்பஞ்சாறு கசண்டுகள், நகராட்சிக் கழிவுகள் போன்ற மரபு–சாரா எரிசக்தி ஆதாரங்களுக்குப் புத்துயிரளிக்கவும் தனிக் கவனம் செலுத்தப்படும்.

**22.** அனைவருக்கும் நோயற்ற வாழ்வு (Health for All) மற்றும் தரமுள்ள மருத்துவ வசதி எளிதில் கிடைக்கச் செய்வது இவ்வரசின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும். இம்மாநிலத்திலுள்ள மருத்துவமனைகளில் அடிப்படை மருத்துவ மற்றும் கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குவதற்கு, நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், தரமான மற்றும் அதிநவீன சிகிச்சை வசதிகள் ஏற்படுத்தப்படும். மருத்துவமனைகளில் மருந்துகள் தடையின்றி கிடைப்பதற்கு வகை செய்யப்படும். மாவட்ட, நகராட்சி மற்றும் வட்ட மருத்துவமனைகள் அனைத்திற்கும் மின் உற்பத்தி எந்திரங்கள் (Generators) வழங்கப்படும்.

**23.** பதினான்கு வயதுக்குட்பட்ட குழந்தைகள் அனைவருக்கும் தரமான கல்வி அளிக்க இவ்வரசு முனைப்பாக செயல்படும். நடப்பாண்டில், பள்ளிகளில் சேராத மற்றும் பள்ளிப்படிப்பைப் பாதியில் நிறுத்திய குழந்தைகள் கண்டறியப்பட்டு, அவர்கள் அனைவரையும் பள்ளிக்கு அழைத்துவரும் பேரியக்கம் தொடங்கப்படும். குறிப்பாக, ஆதிதிராவிடர், பழங்குடியினர், சீர்மரபினர்,

மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைச் சார்ந்த பெண் குழந்தைகளைப் பள்ளிக்கு வரவழைப்பதில் தனிக் கவனம் செலுத்தப்படும். வகுப்பறை, பள்ளிக் குழந்தைகளுக்கு உகந்ததாகவும் ஆர்வமுடன் அவர்கள் பள்ளிக்குவரும் பழக்கத்தை ஏற்படுத்துவதாகவும் அமைய வேண்டும். இந்நிலையை ஏற்படுத்த, "சுயமாகக் கற்றலை" (self-learning) ஊக்குவிக்கும் பொருத்தமான கற்பிக்கும் முறை உருவாக்கப்பட்டு, தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் மூன்று ஆண்டுகளுக்குள் இதற்கான பயிற்சி அளிக்கப்படும். அதிகாரமளிக்கப்பட்ட மக்கள் குழுக்கள் மூலமாக, பள்ளிகளைக் கட்டுவதிலும், பராமரிப்பதிலும், நடத்துவதிலும் பள்ளிக் குழந்தைகளின் பெற்றோர்களுக்கு முக்கியப் பங்களிக்கக் கருதப்பட்டுள்ளது. பள்ளிகளில் மாணவர்—ஆசிரியர் விகிதம் சீரமைக்கப்படும். ஒவ்வொரு வகுப்புக்கும் ஓர் ஆசிரியர் என்ற நிலையை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படும். ஊரகப் பகுதிகளிலுள்ள அனைத்து உயர்நிலைப் பள்ளிகளும் படிப்படியாக மேனிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும். தொழில்நுட்பக் கல்வி

நிறுவனங்களிலும் தொழிற்படிப்புக் கல்லூரிகளிலும் ஊரக மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு 15 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக உயர்த்தப்படும். பதினொன்று மற்றும், பன்னிரெண்டாம் வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் சமுதாயங்களைச் சார்ந்த மாணவிகள் அனைவருக்கும், இவ்வரசு, இலவசமாக மிதிவண்டி வழங்கும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமுதாயங்களைச் சார்ந்த மாணவிகளுக்கு, அரசுக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு வரையில் இலவசக் கல்வி அளிக்கும் திட்டம் செயலாக்கப்படும். தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பொறியியல் கல்லூரிகளும் புதிதாக அமைக்கப்படவுள்ள தொழில்நுட்பப் பல்கலைக் கழகத்தின் கீழ் கொண்டுவரப்படும். ஆசிரியர் சமுதாயத்தின் நலனுக்காக, வெளிப்படையான, தெளிவான பணி இடமாற்ற வழிகாட்டி விதிமுறைகள் வகுக்கப்படும். கல்வி நிறுவனங்கள், நம்முடைய குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உதவுகின்ற, சிறந்த, திறமைமிக்கவர்களை உருவாக்கும் மையங்களாக ஆகவேண்டுமெனில், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்கள் போதுமான நிதிவளம் பெற்றவையாக இருக்க வேண்டியது

அவசியம். கல்விசார் அடிப்படை வசதிகளை மேம்படுத்த சுயநிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கான சாத்தியக் கூறுகளை இவ்வரசு ஆராயும்.

**24.** நமது சமுதாயத்தில் மிகவும் பாதிப்பிற்குள்ளாகக் கூடியவர்கள் மகளிர், குழந்தைகள், ஊனமுற்றோர், முதியோர் ஆகியோராவர். இப்பிரிவினரின் பிரச்சினைகளில் இவ்வரசு தனிக் கவனம் செலுத்தும். வேலைவாய்ப்புகளிலும், நாடாளுமன்றத்திலும், மாநிலச் சட்டமன்றப் பேரவைகளிலும் மகளிருக்கு **33** சதவீத இட ஒதுக்கீடு அளிப்பதற்கு வகை செய்யும் சட்டம் இயற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஊரகப் பகுதிகளில் நலிவுற்ற மகளிர் மேம்பாட்டிற்காக கடன் வசதிகளைப் பெறுவதற்கும், நிதி அதிகாரங்களைப் பெறுவதற்கும் வகை செய்யும் பொருட்டு, "மகளிர் மேம்பாட்டு மன்றங்கள்" ஏற்படுத்தப்படும். மகளிருக்கான சுய வேலைவாய்ப்புகளைப் பெருக்க ஐந்து இலட்சம் பெண்களுக்குத் தொழில்முனைவோர் பயிற்சி அளிக்கும் ஒரு பெருந்திட்டம் செயல்படுத்தப்படும். பெண்களுக்கு பாதுகாப்பு உணர்வை ஊட்டும்வகையில்

அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். வறிய குடும்பத்தினருக்கு, குறிப்பாக, பெண்களுக்கு இன்னல் தரும் கள்ளச்சாராய வியாபாரத்தை இவ்வரசு கடுமையான நடவடிக்கைகளால் ஒடுக்கும்.

**25.** கடந்த ஐந்து ஆண்டுகளில், சத்துணவு மையங்கள் படிப்படியாகச் சீர்கேடடைந்துவிட்டன என்பது கண்கூடு. தகுதியானவர்களுக்கு, தரமான சத்துணவு கிடைக்கும் வகையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் சீரமைக்கப்படும். **1991–1996** ஆம் ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட "தொட்டில் குழந்தை திட்டம்", மற்றும் ஏனைய குழந்தைகள் நலத் திட்டங்கள் மீண்டும் செயல்படுத்தப்படும். நமது முதியோர் கண்ணியமாகவும், வசதியாகவும் வாழும் வகையில், முதியோர் இல்லங்கள் ஏற்படுத்த அரசு சாரா அமைப்புக்களுக்கு இந்த அரசு ஊக்கம் அளிக்கும். ஊனமுற்றோருக்கு பொது இடங்களில் சாய்வுதளங்கள், சிறப்புக் கழிப்பிடங்கள்

போன்ற தனி வசதிகளுக்கு வகை செய்யும் சட்டங்கள் கண்டிப்பாக செயல்படுத்தப்படும்.

**26.** தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகிய பெருமக்கள், ஏற்றத் தாழ்வற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்காக, ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டவர்கள் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் ஆகியோரின் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார நிலையை உயர்த்துவதையே தங்கள் கொள்கையாகக் கொண்டு பாடுபட்டனர். மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள், தனது முந்தைய பதவிக் காலத்தில், சமூகத்தின் ஒடுக்கப்பட்ட பிரிவினருக்காக, கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் 69 சதவீத இட ஒதுக்கீடு அளித்து வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டம் ஒன்றை இயற்றி, அரசியலமைப்புச் சட்டத்தின் 9–ஆம் விவர அட்டவணையில் இதனை இடம்பெறச் செய்தார். உச்சநீதிமன்றம் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இச்சட்டத்தை கருத்தில் கொள்ளாதபோதும், இச்சட்டத்திற்கு பாதுகாப்பு அளிக்க சட்டத் திருத்தம்

கொண்டுவர மத்திய அரசு வலியுறுத்தப்படும். பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டை 27 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக உயர்த்துமாறும், அனைத்திந்திய பணிகள் மற்றும் மத்திய அரசுப் பணியிடங்களுக்கான தேர்வுகளில் இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையை செயல்படுத்துமாறும் மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்படும். தாராளமான கடன்வசதி கிடைக்கச் செய்வதற்காக, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தை இவ்வரசு வலுப்படுத்தும்.

**27.** சிறுபான்மையினரின் பாதுகாப்பு மற்றும் நலன்களைப் பேணுவதற்கு இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. சமுதாய ஒற்றுமையையும், சகோதரத்துவ உணர்வையும் பேணிக்காக்க, அனைத்து மதப் பிரிவுகளையும் சார்ந்த சமய பெரியோர்கள் மற்றும் இளைஞர்கள் அடங்கிய நல்லிணக்கக் குழுக்கள் ஏற்படுத்தப்படும்.

**28.** வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழும் மக்களின் நலன் கருதி, இலக்கிடப்பட்ட மற்றும் தீவிர

சமூகப் பாதுகாப்பு அமைப்புமுறை ஒன்றை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை இந்த அரசு உணர்ந்துள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு, வேலைவாய்ப்பை இழந்த பணியாளர்கள் விரைவில் மறுவாழ்வு பெறும்வகையில், பலதரப்பட்ட தொழில்களில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். தொழிலாளர் நலச் சட்டங்களை மறுபரிசீலனை செய்து தொகுப்பதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்படும். அமைப்பு சாரா துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவும், அவர்களுக்கு நியாயமான ஊதியம் கிடைப்பதற்கு வகை செய்யவும், கண்ணியமான பணிச்சூழலை உறுதி செய்யவும் தனிக் கவனம் செலுத்தப்படும்.

**29.** தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்களின் நலன் குறித்து இந்த அரசு அக்கறை கொண்டுள்ளது. வானிலைத் தகவல் மற்றும் மீன்கள் அதிகமாகக் கிடைக்கும் பகுதிகள் குறித்த தகவல் மீனவர்களுக்கு எளிதில் கிடைக்க ஏதுவாக, தகவல் தொழில்நுட்ப முறையிலான நவீன தகவல் வசதிகள் உருவாக்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும். ‘கச்சத்தீவை’ மீட்டு,

நம்முடைய மீனவர்களுக்கு மீன்பிடி உரிமையை திருப்பித்தர இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்தும்.

**30.** தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில் மோசமான நிலையில் உள்ளது. நூற்பாலைகள் நலிவுற்றதற்குரிய காரணங்களை ஆராய்ந்து, அவை இயங்க உரிய நிவாரண நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

**31.** இவ்வரசு, மாநிலத்தில் சுற்றுலாத் தொழிலை ஊக்குவிக்கக் கருதியுள்ளது. வேலைவாய்ப்பு, உள்ளூர் கைவினைஞர்கள் மேம்பாடு, அரசுக்கு வருவாயை அதிகரித்தல் ஆகியவற்றிற்குரிய வாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்கத்துடன் விரிவான சுற்றுலா மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்படும்.

**32.** சுதந்திரமாகவும் தன்னாட்சி உரிமையுடனும் இயங்கும் நீதிமன்ற அமைப்பு, நமது ஜனநாயக அமைப்பின் அடித்தளமாகும். சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியுடன் கலந்தாலோசித்து, நிலுவையாகவுள்ள வழக்குகளை விரைந்து முடிப்பதற்கு நீதி நிர்வாகம் மற்றும்

ஏனைய தேவைகளைக் கண்டறிந்து, தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**33.** தமிழ்நாட்டில் உள்ள கோயில்கள், தமிழக மக்களின் பழங்கால பண்பாடு, நாகரீகம், கலை, வாழ்க்கைமுறை ஆகியவற்றை பிரதிபலிக்கின்றன. கோயில்களின் முறையான நிர்வாகத்தை உறுதிசெய்ய இந்த அரசு தகுந்த நடவடிக்கைகளை எடுக்கக் கருதியுள்ளது.

**34.** பேரறிஞர் அண்ணா அவர்களால் வகுக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்ட தமிழ் மற்றும் ஆங்கிலம் என்ற இரு மொழிக் கொள்கையை, இவ்வரசு தொடர்ந்து செயல்படுத்தும். மாநில நிர்வாகத்தில் தமிழ் மொழி பயன்படுத்தப்படுவதை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். தமிழ்நாட்டின் கலைப் பண்புகளைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**35.** எந்தவொரு நிர்வாக அமைப்பிற்கும் அரசுப் பணியாளர்களே வலுவான அடிப்படையாக

விளங்குகின்றனர். இவ்வரசு தன் பணியாளர்களின் உண்மையான குறைகளைப் பரிவுடன் பரிசீலித்து, அவர்களுடைய நலன் மற்றும் பணி நிலை தொடர்பான பிரச்சினைகளைப் பரிசீலிக்க நடவடிக்கைகளை எடுக்கும். இதற்கு ஏதுவாக, அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள், ஏனைய பிரிவுகளிலுள்ள பணியாளர்கள் ஆகியோரின் பிரதிநிதிகள், மாவட்டங்களிலும், மாநில அளவிலும், உள்ள துறைத் தலைவர்களைச் சந்தித்து, தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு வகை செய்யும் ஒரு திட்டம் செயல்படுத்தப்படும். தரமான நிர்வாகத்தை அளிக்கும் வகையில் பணியாளர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கான வாய்ப்புகளை மேம்படுத்தவும், அவர்களுடைய திறமையைக் கூர்மைப்படுத்தவும் மற்றும் பணிச் சூழல்களை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**36.** அரசையும் மக்களையும் இணைப்பதில் தகவல் தொடர்புத் துறை (media) முக்கிய பங்கு வகிக்கிறது. இத் துறையில் பணிபுரியும் செய்தியாளர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண,

அவர் தம் நலன்கள் குறித்து தேவையான நடவடிக்கைகளை இவ்வரசு எடுக்கும்.

**37.** வணிகர்கள் துன்பத்திற்குள்ளாகாவண்ணம் விற்பனை வரி நிர்வாகம் சீரமைக்கப்படும். வறுமையில் வாழும் வணிகர்களுக்கு நிதியுதவி மற்றும் ஏனைய உதவிகள் அளிப்பதற்குரிய வாய்ப்புகள் ஆராயப்படும்.

**38.** இம்மாநிலத்தில் வெளிப்படையான, நேர்மையான திறமையான நிர்வாகத்தை அளிக்கும் பொருட்டு, அரசு தேவையான அனைத்து வழிமுறைகளையும் பின்பற்ற உறுதிபூண்டுள்ளது. கோப்புகளை 90 நாட்களுக்குள் முடிக்கும் வகையில், "கோப்புகளை முடிக்கும் வாரம்" என்ற திட்டம் செயலாக்கப்படும். மக்களுக்கும் அரசுக்கும் இடையே நேரடித் தொடர்பு இருக்க இயலும் பொருட்டு, மின்னணுசார் நிர்வாகமுறை பின்பற்றப்படும்.

**39.** இம்மாநில மக்கள், இந்த அரசிடம் அதிக எதிர்பார்ப்புகளைக் கொண்டுள்ளனர் என்பதை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு

அறிவர். ஆனால், மாநிலம் கடுமையான நிதி நெருக்கடியில் இருக்கும் நேரத்தில், புதிய அரசு பொறுப்பேற்றுள்ளது. 1996ல் இந்த அரசு பதவி விலகியபோது, ரூ.874 கோடி ரொக்க இருப்புடன், வளமான பொருளாதார நிலைமையை விட்டுச் சென்றது. ஆயினும், கடந்த ஐந்தாண்டுகளில், இந்த நிதிகள் கரைக்கப்பட்டதோடு அல்லாமல், இந்த ஆண்டு மார்ச் இறுதியில் அரசுக் கருவூலத்திலிருந்து அளிக்கப்பட வேண்டிய தொகை (cash liabilities) ரூ.700 கோடிக்கு மேல் இருந்தது. மாநில அரசு, அன்றாட பணத்தேவைகளுக்குக்கூட தற்போது இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து கடன் வாங்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் வருவாய்ப் பற்றாக்குறை கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு வளர்ந்துள்ளது. பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில், "தமிழ்நாடு அரசின் நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கை" ஒன்றை இப்பேரவையில் வைக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. அரசு நிதிநிலை அடிப்படையில் ஆரோக்கியமாக இருக்கும்போதுதான், மக்களுடைய எதிர்பார்ப்புகளை நிறைவு செய்ய முடியும்.

மாநில அரசின் நிதி நிலையை மீண்டும் சரியான தடத்தில் கொண்டுவரும் பொருட்டு, நிதிச் சீர்திருத்த நடவடிக்கை மேற்கொள்ள கருதப்பட்டுள்ளது. இது பயனளிக்க சிறிதுகாலம் ஆகும். இம்மாநில அரசின் நிதி நிலையை சீரமைக்க இந்த அரசு எடுக்க இருக்கும் நடவடிக்கைகளுக்கு, தமிழக மக்கள் ஆதரவு அளிப்பர் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

**40.** வறுமை மற்றும் இல்லாமையை ஒழிக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று தமிழக மக்களுக்கு இவ்வரசு உறுதி அளிக்கிறது. வறுமையை முற்றிலும் நீக்குவதற்கான சூழ்நிலை உருவாக்கப்படும். திட உறுதியுடனும் திண்ணிய எண்ணத்துடனும் இம்மாநிலத்தை பொருளாதார வகையில் முன்னேற்றமடையச் செய்து, வறுமையை ஒழித்தல் என்கிற உறுதிமொழியை முற்றிலுமாக நிறைவேற்ற உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**41.** இவ்வரசின் பொதுவான செயல் முறைகளையும் நோக்கங்களையும் குறிக்கின்ற சில கொள்கை நெறிமுறைகளை மட்டுமே நான் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். இந்நெறிமுறைகளை தீவிரமாகச் செயலாக்குவதன் மூலமாக, தமிழ்நாட்டை, இந்நாட்டிலேயே வளமும் எழுச்சியும் மிக்க மாநிலமாக நம்மால் மாற்றமுடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். நடைபெறவிருக்கும் விவாதம், தமிழ்நாட்டு மக்களின் வளமான வாழ்க்கையை உறுதிசெய்யும் இவ்வரசின் தொலைநோக்கு கண்ணோட்டத்தை விரிவாக்கும் என்று நம்புகிறேன்.

**42.** நம்முன் காத்திருக்கும் கடுமையான பணிகளை நிறைவேற்ற என்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வணக்கம்**

**ஜெய்ஹிந்த்**